25th February 1969]

Encroachments on the pathways, porambokes, etc., in certain Municipalities

*40 *Q*.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that temples, buildings and shops are being built on the pathways and poramboke lands in all the Municipalities including Madurai; and

(*b*) if so, the action taken thereon?

நகராட்சிகளில் சாலை, புறம்போக்கு ஆகியவற்றில் வௌவுதல்கள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) மதுரை உட்பட எல்லா நகரசபைகளும், பாதைகள், புறம்போக்குகள் ஆகியவற்றில் (1) கோவில்கள், கட்டிடங்கள் கட்டு வதையும், (2) கடைகள் வைப்பதையும் அரசு அறியுமா ?

(இ) ஆமெனில், அதன்மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) மதுரையிலும், ஏனைய நகராட்சிகளிலும் மற்றும் சென்னை மாநகரிலும் சாலைகள், தெருக்கள், புறம்போக்குகள் சிலவற்றில் சாலை ஓரக் கோயில்கள், கடைகள் முதலியவற்றைக் கட்டியிருப்பதன் மூலமாக ஆக்கிர மிப்புகள் நடைபெற்றிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியும்.

(இ) கண்டுபிடிக்கப்பட்ட ஆக்கிரமிப்புகளைப் பொறுத்த வரை, ஒவ்வொரு ஆக்கிரமிப்பின் தகுதிக்கேற்றவாறு ஏற்புடைய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, என் ஊரில் தேனியில் மட்டும் 1,352 ஆக்கிரமிப்புகள் இருப்பதாக முனிசிபல் ரிப்போர்டில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பத்துப்பன்னிரண்டு ஆண்டுகளாக அவை இருக்கின்றன. பன்னிரண்டு வருஷமாக அரசுக்கு அவ்வப்போது எழுதிக்கொண்டு வருகிறார்கள். திண்டுக்கல்லிலும் மதுரையிலும் அப்படி ஆயிரக்கணக்கான ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன. போக்குவரத்துக்கும், பொது மக்களுக்கும் இடைஞ்சலாக பல இருக்கின்றன. அவற்றை அகற்ற அரசாங்கம் நடவடிக்கை துரிதமாக எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இதுபோன்ற ஆக்கிர மிப்புகளில் இருக்கிற சட்ட அம்சம் என்னவென்றால் அந்தந்த முனிசிபாலிடிகள் அந்தந்த ஸ்தல ஸ்தாபனங்கள்தான் அதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். அவை Land Encroachment Act, Madras Public Premises Eviction of Unauthorised Occupants மூலம் நடவடிக்கை எடுக்க அதிகாரம் இருக்கிறது சென்னையைப் பொருத்தவரையில் கார்ப்பரேஷனும், மதுரை

போன்ற இடங்களில் அந்தந்த முனிசிபாலிடிகளும் நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்படி எடுக்காவிட்டால் மூன்று வருஷங்கள் கழித்து அதன் மீது கலெக்டர் தலையிட்டு நடவடிக்கை எடுப்பார். அந்த வகையில் அரசாங்கத்தினுடைய முழுப்பொறுப்பில் அவை இல்லை. அவை குறித்து கவனத்திற்குக் கொண்டுவந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

THIRU A. R. DAMODARAN: Sir, while appreciating the very good advice that has been given to local bodies, may I know from the Hon. Minister whether the Government would set a good example by removing the encroachments on national highways and State highways which is within the control of the State Government?

THE HON. THIRU K. A. MATHIALAGAN: I would like to inform the hon. Member that as far as highways are concerned, the Government would certainly take necessary action whenever these are brought to their notice.

திரு. எம். எத்திராஜுலு: தமிழகத்தில் ஏறக்குறைய 84 நகர சபைகள் உள்ளன. மூன்று வருடங்களுக்கு மேல் அந்த ஆக்கிரமிப்புகளை அவர்கள் அகற்றவிட்டால் கலெக்டர் அவர்களும் மற்றவர்களும் நடவடிக்கை எடுப்பார்கள் என்று சொல்லப்பட்டது. நகரசபையில் இருக்கிற அங்கத்தினர்களை ஏன் இந்த ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன என்று கேட்டால் அவர்கள் நாங்கள் மறு தேர்தலுக்கு நிற்கவேண்டும், இல்லாவிட்டால் நிற்க முடியாது என்ற நிலை ஏற்படும் ஆகவே அவை அப்படியே இருப்பது நல்லது என்ற அடிப்படையில் இருக்கிறார்கள். ஆகையால் சர்க்காரே எல்லா நகரசபையிலும் எத்தனை பேர் அப்படி ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள் என்ற விவரத்தை சேகரித்து உடனடியாக சர்க்காருக்கு அனுப்பவேண்டுமென்று அரசாங்கம் கேட்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மாண்புமிகு உறுப்பினர் எத்திராஜ் அவர்கள் நான் சொல்ல வேண்டிய பதிலைச் சொல்லிவிட்டார்கள். சமூக சங்கடங்களும் அரசியல் சங்கடங்களும் அதிகமாக இருக்கின்றன. அரசாங்க நிர்வாகப் பிரச்னையாக மட்டும் அவை இல்லை. நம் எல்லோருக்கும் இருக்கிற பெரிய அறைகூவலாகத்தான் அவை இருக்கின்றன. எழுதி வைத்திருக்கிற சட்டத்தின் மூலம் அகற்றுவதைக் காட்டிலும், அரசியல் ரீதியிலும் எப்படி சமாளிப்பது என்ற நிலையில் அவை இருக்கின்றன.

THIRU A. R. DAMODARAN: Sir, may I know whether the suggestion made by the late Chief Minister of Madras, who realised the difficulties in removing the encroachments by a party Government, that a committee of all parties be formed to remove such encroachments will be pursued and the encroachers evicted?

25th February 1969]

THE HON. THIRU K. A. MATHIALAGAN : The Government will certainly pursue the suggestion made by the late lamented Chief Minister. But the difficulty is, as was pointed out by the hon. Member Thiru Ethirajulu, the same conditions will continue to prevail as the committee of all parties cannot come to any definite conclusions in such matters.

THIRUMATHI S. MANJUBHASHINI : Mr. Chairman, Sir, the Hon. Minister wanted that definite instances should be brought to his notice regarding encroachments on public highways. May I bring to his notice that on the road from Madras to Thiruvottiyur and Ennore which is considered one of the heaviest industrial areas there are encroachments on both sides, of the road? This is causing a lot of trouble and incinvenience to fast moving vehicles and lorry traffic. Will the Hon. Minister take this fact into consideration and see that these encroachments are removed and the road is left free for fast moving and lorry traffic?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : The hon. Member's suggestion is welcome. I too know the difficulty caused by these encroachers. They have considerably reduced the width of the road at two or three places and these act as bottlenecks on the free flow of traffic. The Government will certainly look into it.

House Rent Allowance to Government servants

*41 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether there is any proposal for payment of House Rent Allowance to the Madras Government servants on a par with that given to the Central Government employees; and

(b) if so, the present stage thereof?

அரசு ஊழியர்களுக்கு வீட்டு வாடகைப்படி

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மத்திய அரசு அதன் ஊழியர்களுக்கு வீட்டு வாடகைப் படி அளிப்பது போன்று தமிழக அரசு ஊழியர்களுக்கும், வீட்டு வாடகைப்படி அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஆமெனில், அது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) இல்லை, ஐயா.

(ஆ) இந்த வினா எழவில்லை. இது சம்பந்தமாக சர்க்காருக்கு மனம் நிரம்ப இருக்கிறது. ஆனால் இதைச் செய்ய வேண்டிய மார்க்கம், அரசாங்க நிதிநிலையில் தற்போது இல்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : தற்போதைய ஆளும் கட்சி தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதிகளில் மத்திய சர்க்கார் ஊழியர்கள் என்னென்ன சலுகைகளைப் பெறுகிறார்களோ, அவை